[*2022 ஏப்ரல் 22*

கிளை நிலையம் செயல்படுவதற்கான நடவடிக்கைகளை அரசு கண்டிப்பாக எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 160, மாண்புமிகு உறுப்பினர் திரு. M. ராஜமுத்து, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

160—

ஆரம்ப சுகாதார நிலையம்

***6908—திரு. M. ராஜமுத்து:**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மல்லூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி ஒன்றியத்தில் மல்லூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. 30 படுக்கை வசதிகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையம் இல்லாத ஊராட்சி ஒன்றியத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தினைத் தரமுயர்த்துவது என்பது அரசின் கொள்கை முடிவாகும். அந்த வகையில், பனமரத்துப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில், பனமரத்துப்பட்டி பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரமுயர்த்தப்பட்டு, அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. எனவே, அதே ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மல்லூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தற்போது தரமுயர்த்த வேண்டிய அளவுக்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. M. ராஜமுத்து அவர்கள்.*

திரு. M. ராஜமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், புரட்சித்*

2022 ஏப்ரல் 22]

தலைவி அம்மா அவர்கள் ஆகிய இருபெரும் தலைவர்களை வணங்குகிறேன். சேலம் மாவட்டம், வீரபாண்டி சட்டமன்றத் தொகுதியில் என்னை வேட்பாளராக நிற்க வைத்து, சட்டமன்ற உறுப்பினராக்கி, அழகு பார்த்துக் கொண்டிருக்கும், மண்ணின் மைந்தர் முன்னாள் முதல்வர், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் பாதம் தொட்டு வணங்குகிறேன். முன்னாள் முதலமைச்சர் அண்ணன் திரு. ஓ.பி.எஸ். அவர்களையும், எதிர்க்கட்சிக் கொறடா அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் கேள்வியைக் கேளுங்கள். பேரவையின் நிகழ்ச்சிகள் 'Live' ஆக ஓடிக் கொண்டிருக்கிறது. எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, நீங்கள் கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. M. ராஜமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத்தான் நான் பேசுகிறேன். வீரபாண்டி சட்டமன்றத் தொகுதியில் என்னை பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வைத்த வீரபாண்டி சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததுபோல் பனமரத்துப்பட்டியில் 30 படுக்கைகள் இருக்கின்றன. ஆனால், அங்கு 32,000 மக்கள் வசிக்கின்றார்கள். நான் மல்லூர் தொகுதியில் கேட்கிறேன். மல்லூரில் 37,000 மக்கள் வசித்து வருகிறார்கள். எனவே, மல்லூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் தரமுயர்த்தப்பட்டால் மக்களுக்கு வசதியாக இருக்கும். ஏனென்றால், மருத்துவமனைக்குச் செல்ல, மல்லூரிலிருந்து பனமரத்துப்பட்டிக்குச் செல்ல 7 கிலோ மீட்டர், மல்லூரிலிருந்து G.H.–க்குச் செல்ல 13 கிலோ மீட்டர், மல்லூரிலிருந்து ராசிபுரத்திற்குச் செல்ல 12 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. ஆகவே தூரம் அதிகமாக இருப்பதால், மல்லூரில் உள்ள 37,000 மக்கள் தொகையைக் கணக்கில் கொண்டு, கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரமுயர்த்தி தந்தால் அங்குள்ள மக்களுக்கு ஏதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

[*2022 ஏப்ரல் 22*

முற்பகல் 11–05

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மல்லூரில் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று ஏற்கெனவே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல 37,000 மக்கள் தொகையிருந்தாலும், கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் அங்கே சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்த ஒன்றியத்தைப் பொறுத்தவரையில், பனமரத்துப்பட்டியில் ஒரு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமும், கொண்டலம்பட்டியில் ஒரு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமும், தும்பல்பட்டியில் ஒரு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமும், மல்லூரில் ஒரு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமும் என 4 கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற மல்லூரில் உள்ள அந்த மருத்துவமனையைப் பொறுத்தவரையில் புறநோயாளிகள் பிரிவுக்கான ஒரு கட்டடம், மகப்பேறு பிரிவுக்கான ஒரு கட்டடம், உள் நோயாளிகள் பிரிவுக்கான ஒரு கட்டடம், செவிலியர்களுக்கான குடியிருப்பு என்று பல கட்டட வசதிகள் இருக்கின்றன. 1955 ஆம் ஆண்டில் புற நோயாளிகளுக்காகக் கட்டப்பட்ட கட்டடம் மிகவும் பழமை வாய்ந்த கட்டடம் என்பதால், இன்னொரு கூடுதல் கட்டடம் கட்டப்பட வேண்டும் என்று ஏற்கெனவே வைத்த கோரிக்கையின் அடிப்படையில் ரூ.48 இலட்சம் செலவில் புதிய கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மிக விரைவில் அந்தப் பணிகள் முடிவடையும் தருவாயில் நிச்சயம் அந்தக் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் பல வசதிகளை அந்தப் பகுதி மக்களுக்குத் தரும் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. M. ராஜமுத்து அவர்கள். தருகிறேன் என்று அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். நன்றி சொல்லலாமே! 20 உறுப்பினர்களுக்குமேல் துணைக் கேள்வி கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதிகம் இரண்டு பேருக்காவது கொடுக்க வேண்டும் என்று சொன்னால், டக் டக் என்று கேள்வியும் இருக்க வேண்டும், பதிலும் அப்படியே இருக்க வேண்டும்.

திரு. M. ராஜமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட பெரம்பலூர்,

2022 ஏப்ரல் 22]

பி. நாட்டார்மங்கலம், நெய்க்காரப்பட்டி பகுதிகளில் உள்ள துணை சுகாதார நிலையங்கள் மிகவும் பழுதடைந்துள்ளன. பழைய கட்டடம் என்பதால், அவற்றையும் புதுப்பித்துக் கொடுத்தால் ஏதுவாக இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கின்ற துணை சுகாதார நிலையங்கள் எவற்றுக்கெல்லாம் புதிய கட்டடங்கள் அமைய வேண்டுமோ, அவற்றையெல்லாம் மாவட்ட சுகாதார அலுவலர்களைக் கொண்டு ஆய்வுகளை மேற்கொள்ளச் செய்து, அந்தக் கட்டடங்களையெல்லாம் வருகின்ற நிதியாண்டில் கட்டித் தருவதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அறிவார்ந்த ஆலோசனைகளைப் பெற்று செய்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. ராமலிங்கம் அவர்கள்.*

திரு. பெ. ராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் சட்டமன்றத் தொகுதி, மோகனூர் பேரூரில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகின்றது. வட்டாரத் தலைமையிடமாக மோகனூர் இருக்கின்ற காரணத்தினாலும், மோகனூர்—வாங்கல் பாலம் அமைந்த பிறகு கரூர் பகுதியிலிருந்து அந்த மருத்துவமனைக்கு அதிக நோயாளிகள் வந்து செல்கின்ற காரணத்தினாலும், மோகனூரில் அதிக அளவில் கோழிப் பண்ணைகள் இருப்பதாலும், வெளி மாநிலத்தவர்கள் அந்தப் பகுதியில் அதிகம் இருப்பதாலும், அந்த அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்தி வட்டார தலைமை மருத்துவமனையாக மாற்றிக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரம் உயர்த்துதலுக்கு பல்வேறு விதிமுறைகள் இருக்கின்றன. அந்த விதிமுறைகளின் அடிப்படையில் அவர் சொல்லியிருக்கின்ற அந்த மருத்துவமனையைத் தரம் உயர்த்துவது சம்பந்தமான நடவடிக்கைகள் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று எதிர்காலத்தில் நிறைவேற்றித் தரப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. சரஸ்வதி அவர்கள்.*

டாக்டர் சி. சரஸ்வதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொடக்குறிச்சி தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான, மொடக்குறிச்சியில் செயல்பட்டுவரும் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு தாலுகா தலைமை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தினால் இங்கு சிகிச்சை பெற வரும் கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் நோயாளிகளுக்கு மிகவும் வசதியாக இருக்கும். மொடக்குறிச்சி பகுதியானது தனித் தாலுகாவாக செயல்படத் தொடங்கி ஐந்து ஆண்டுகள் நிறைவு பெற்றுவிட்டன. அதிக எண்ணிக்கையிலான படுக்கை வசதிகளை ஏற்படுத்தி மருத்துவமனையை நவீனமயமாக்க வேண்டும் என்ற கோரிக்கையை நிறைவேற்றித் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த மன்றத்தில் தெரிவித்திருப்பதைப்போல 25 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 25 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் அடுத்த நிதியாண்டில் அமையவிருக்கின்றன. அதுபோல் இங்கு சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்டிருக்கின்ற பல்வேறு ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்துவது சம்பந்தமான கேள்விகளை ஆராய்ந்து, சம்பந்தப்பட்ட மருத்துவ அலுவலர்களை அனுப்பி, அதற்கான தேவையிருப்பின் மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று அடுத்த நிதியாண்டில் நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். தேன்மொழி அவர்கள்.*

2022 ஏப்ரல் 22]

திருமதி எஸ். தேன்மொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களையும், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன். திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் உள்ள வத்தலகுண்டு மற்றும் நிலக்கோட்டையில் உள்ள அரசு மருத்துவமனைகளில் ஐந்தில் ஒரு பங்கு மருத்துவர்கள்தான் தற்போது பணிபுரிந்து வருகிறார்கள். இதனால் அங்கு தினந்தோறும் வரும் நூற்றுக்கணக்கான நோயாளிகளைக் கவனிக்க முடியாமல் மருத்துவர்கள் திணறி வருகிறார்கள். எனவே, உடனடியாக மருத்துவர்களின் பற்றாக்குறையை நீக்க அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவத் துறையில் இருக்கின்ற காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்பிட வேண்டுமென்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவுறுத்தலுக்கேற்ப, அந்தத் துறையிலிருக்கின்ற காலிப் பணியிடங்களுக்கான பட்டியல்* MRB *நிர்வாகத்திடம் தரப்பட்டிருக்கின்றது. விரைந்து காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நிவேதா எம். முருகன் அவர்கள்.*

திரு. நிவேதா எம். முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் தொகுதி, இளையாலூர் ஊராட்சி, வடகரையில் கடந்த காலங்களில் வட்டார வளர்ச்சி அலுவலகம் மூலமாக மருத்துவமனை இயங்கி வந்தது. 20 ஆண்டுக் காலமாக சிதிலமடைந்துள்ள அந்த மருத்துவமனை தற்போது மூடப்பட்டுள்ளது. இப்போது அந்த ஊராட்சியில் 12,000 மக்கள் தொகையும், 8,000 வாக்காளர்களும் உள்ளனர். பக்கத்தில் அன்னவாசல், முத்தூர், மன்னம்பந்தல், குளிச்சார் ஆகிய ஊராட்சிகள் இருக்கின்றன. ஆகவே, வடகரையில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர்*

அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சட்டமன்ற உறுப்பினர் அவர்களோடு சீர்காழி, பூம்புகார், திருவெண்காடு போன்ற பல்வேறு பகுதிகளில் இருக்கின்ற அடிப்படை வசதிகள் சம்பந்தமான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அங்கே ஏற்கெனவே எந்த மாதிரியான கட்டமைப்புகள் இருக்கின்றதோ, அதை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

சீர்காழியை பொறுத்தவரை முன் எப்போதும் இல்லாத அளவிற்கு நீரிழிவு நோயாளிகளுக்கான 5 படுக்கை வசதிகளெல்லாம் செய்யப்பட்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாக அறிவார். நிச்சயம் அவருடைய கோரிக்கை எதிர்காலத்தில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. T.K. அமுல் கந்தசாமி அவர்கள்.

திரு. T.K. அமுல் கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், மரியாதைக்குரிய எதிர்க்கட்சிக் கொறடா மூவரையும் வணங்குகிறேன்.

எனது தொகுதியான வால்பாறை தொகுதி மலைப் பகுதியில் நகராட்சிப் பகுதியில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கின்றது. ஒரு வேதனையான விஷயம் என்னவென்று சொன்னால், ஒரு மாதக் காலமாக அங்கு மருத்துவர் கிடையாது. ஆகவே, மக்கள் மிகவும் அவதிக்குள்ளாகின்றார்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு தொகுதி மக்களின் சார்பாக ஒரு பணிவான வேண்டுகோள். அரசு மருத்துவமனையில் இரு மருத்துவர்கள் இருக்கின்றார்கள். அதில் ஒரு மருத்துவரை அவசரக் காலமாக மாற்றுப் பணியில் இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணி அமர்த்துவார்களா என்பதைத் தங்களின் வாயிலாகக் கேட்டு, நான் அமர்கின்றேன்.

2022 ஏப்ரல் 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவம் சார்ந்த களப் பணியாளர்களின் பணியிடங்களுக்கான மாறுதல் மாண்புமிகு முதல்வர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி கலந்தாய்வு (counseling) என்கின்ற முறையில், transparent transfers என்கின்ற வகையில், அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதுவரை 12,000–க்கும் மேற்பட்ட பணியிடங்கள் மாறுதலுக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றன. என்றாலும்கூட, வால்பாறையில் உறுப்பினர் சொல்லியிருப்பதைப்போல ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவர் இல்லையென்றால், உடனடியாக இன்றே அதற்கான ஆணையைப் பெற்று, நாளையோ, நாளை மறுநாளோ மருத்துவர் காலிப் பணியிடத்தை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேன்கனிக்கோட்டை தாலுகாவிலிருந்து அஞ்செட்டி புதிய தாலுகாவாக உருவாக்கப்பட்டிருக்கிறது. அஞ்செட்டியில் அரசு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி வருகின்றது. அஞ்செட்டி தாலுகாவில் 10–க்கும் மேற்பட்ட ஊராட்சிகளில் 200–க்கும் மேற்பட்ட மலைக் கிராமங்களிலிருந்து 1 இலட்சம் மக்கள் உயர் சிகிச்சை பெற வேண்டுமென்றால் தேன்கனிக்கோட்டை அரசு தாலுகா மருத்துவமனைக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, புதிதாக உருவாக்கப்பட்ட அஞ்செட்டி தாலுகாவில் உள்ள அரசு மேம்படுத்தப்பட்ட மருத்துவமனையைத் தாலுகா மருத்துவமனையாகத் தரம் உயர்த்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் நன்கு அறிவார்கள். அவர் சொன்ன தேன்கனிக்கோட்டை போன்ற

பல்வேறு பகுதிகளிலிருக்கிற மலைக் கிராமங்களுக்கு அவரும், நானும் சேர்ந்து 15 கிலோ மீட்டர் நடந்தே சென்று மலைக் கிராம மக்களின் கோரிக்கைகளைக் கேட்டுப் பெற்றோம். 108 Ambulance வாகனம் உடனடியாக வேண்டுமென்று கேட்டார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின்மூலம் உடனடியாக வழங்கப்பட்டது. அந்த மலைக் கிராமங்களில் இருக்கின்ற மக்களில் 2 பேருக்கு 2 செயற்கை கால்கள் வேண்டுமென்று கேட்டார்கள். உடனடியாக 2 battery கால்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கி, அவர்கள் நடப்பதை மகிழ்ச்சியுடன் பார்க்கவும் செய்தார்கள். அந்தளவுக்கு அங்கே நடவடிக்கைகள் ஏற்கெனவே நடைபெற்று முடிந்திருக்கின்றன. என்றாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தத் தேவையறிந்து நிச்சயமாக எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள்.

முற்பகல் 11–15

திரு. ஐ.பி. செந்தில்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய பழனி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கொடைக்கானல் சர்வதேச சுற்றுலாத் தலங்களில் ஒன்றாக இருக்கிறது என்பதை நாம் அறிவோம். அங்கே விபத்துகள் ஏற்படுகிறபோதும் அல்லது ஏதேனும் அவசர சிகிச்சைகள் மக்களுக்குத் தேவைப்படுகிறபோதும் அங்கிருந்து மதுரைக்கு 100 கிலோ மீட்டர்; திண்டுக்கல்லுக்கு 70 அல்லது 80 கிலோ மீட்டர்; கானா விலக்கு மருத்துவமனைக்கு 90 கிலோ மீட்டர் செல்லுகிற நிலை இருக்கிறது. சுற்றுலாப் பயணிகள் முழுமையாக வரக்கூடிய பகுதி கொடைக்கானல் பகுதி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், கேள்விக்கு வாருங்கள்.

திரு. ஐ.பி. செந்தில்குமார்: எனவே, அங்கே ஓர் அவசர சிகிச்சைப் பிரிவு மற்றும் விபத்து சிகிச்சை முதலுதவிப் பிரிவு; Echocardiologist மருத்துவர்களை அங்கே நியமித்து, அந்த மருத்துவமனைக்கு அந்தப் பயனைப் பெறச் செல்கிற மக்களுக்கு அந்த உதவிகள் உடனடியாகக் கிடைக்க மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அதற்குரிய

2022 ஏப்ரல் 22]

வழிவகைகளை ஏற்படுத்தித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக, மலைவாழ் மக்கள் வசிக்கிற மலைப் பகுதிகளில் மருத்துவர்களும், செவிலியர்களும் தங்குவதற்குண்டான ஏற்பாடுகள் என்பது கடந்த காலங்களிலிருந்து இல்லாத நிலை என்பது இருந்து கொண்டிருக்கிறது. அதை நேரடியாக உணர்ந்தபட்சத்தில், ஊட்டி போன்ற பல்வேறு மலைவாசஸ்தலங்களில் செவிலியர்களும், மருத்துவர்களும் தங்குவதற்கான குடியிருப்புகளைக் கட்டுவதற்கான நடவடிக்கைகள் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உத்தரவுப்படி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்தவகையில், கொடைக்கானல் பகுதியிலேயும் மருத்துவர்களும், செவிலியர்களும் தங்குவதற்குண்டான வசதிகளை ஏற்படுத்தினால் நிச்சயம் நிறைய மருத்துவர்கள் அங்கே தங்கி பணியாற்றுவதற்கான அந்த மனநிலையைப் பெறுவார்கள். எனவே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற அந்த வசதிகளை அங்கே ஏற்படுத்துவதற்கு அடிப்படை வசதிகளை முதலில் மேம்படுத்திவிட்டு, அதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள், சுருக்கமாகக் கேளுங்கள். நேரமாகிவிட்டது.*

திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதி, கிள்ளியூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மிடாலம் ஊராட்சி, தேவிகோடு பகுதியில் அரசுப் புறம்போக்கு நிலம் 55 சென்ட் இருக்கிறது. அங்கே தேசிய சுகாதார குழுமத்தின் (NHM) நியதிப்படி, ஓர் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இதற்கான வரையறைகள்*

சொல்லப்பட்டிருக்கின்றன. நிச்சயம் அந்த வரையறைக்குள் அந்தப் பகுதி உட்படும்போது எதிர்காலத்தில் அங்கே புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 161, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கணபதி, மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

161—

விளையாட்டுத் திடல்

***17885—திரு. க. கணபதி:**

மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரவாயல் தொகுதி, வார்டு எண் 155, இராமாபுரம் பகுதியில் விளையாட்டுத் திடல் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மதுரவாயல் தொகுதி, வார்டு எண் 155, இராமாபுரம் பகுதியில் விளையாட்டுத் திடல் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கணபதி அவர்கள்.*

திரு. க. கணபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, வார்டு எண் 155, இராமாபுரம் பகுதியில் விளையாட்டுத் திடல் அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*